திருக்கோயில்களில் குடமுழுக்கு, அன்னதானம் எனப் பாரதத் திருநாட்டின் முன்மாதிரியாய் விளங்கும் எங்கள் தாயே! அகவை 68—ல் அடியெடுத்து வைக்கும் எங்கள் தங்கத் தாயின் பாதங்களில் பணிந்து வணங்குகிறேன் அம்மா!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதி திருக்கடையூரிலே, அருள் பாலிக்கும் அமிர்தகடேஸ்வரர் உடனுறை அபிராமி அம்மனுக்கு அழகு சேர்க்கும் வகையிலே, அப்பகுதியைச் சுற்றுலாத் தலமாக்கி, பக்தர்களுக்கு தங்கும் விடுதியும் அமைத்திட்ட எங்கள் தாயே! தமிழக மாநில பக்தர்கள் மட்டுமல்ல, வெளி மாநில பக்தர்களும், குழந்தைகளும் என தினம்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் திருக்கடையூருக்கு வருகின்றனர். 59 வயது பூர்த்தியடைந்தவர்களுக்கு உக்கிரசாந்தியும், 60, 61 வயதுடையவர்களுக்கு சஷ்டியப்த பூர்த்தியும், 70 வயது உடையவர்களுக்கு பீமரத சாந்தியும், 80 வயது உடையவர்களுக்கு சதாபிஷேகமும் அங்கு செய்விக்கப்படுவதால் பலரும் பயன் பெற்று வருகிறார்கள். எனவே, பக்தர்கள் நலன் கருதி இந்த அவையிலே நான் கொடுத்த வினாவிற்கு பதில் வருவதற்கு முன்பே திருக்கடையூர் திருக்கோயிலில் ஆவின் பாலகத்தை அமைத்துத் தந்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் கோடானுகோடி நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 58, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

58—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***41088—திரு. சு. மாதேஸ்வரன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, ஆத்தூர் ஒன்றியம், கல்லாநத்தம் ஊராட்சியிலுள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 *பிப்ரவரி* 17]

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதிக்குட்பட்ட கல்லாநத்தம் ஊராட்சியிலுள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த தேவையான இடவசதி இல்லாததாலும், தற்போது இப்பள்ளி கல்லாநத்தம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி வளாகத்திலேயே செயல்பட்டு வருவதாலும், பொது மக்கள் பங்களிப்புத் தொகையான ரூ.2 இலட்சம் செலுத்தப்படாததாலும், இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தற்போது தரமுயர்த்த இயலாது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.*

முற்பகல் 11—15

திரு. சு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறையில் காலணி முதல் மடிக்கணினி வரை வாரி வழங்கி, அரசுப் பள்ளியில் பயில்கின்ற மாணவனையும் மாநிலத்தில் முதல் மதிப்பெண் பெற வைத்த வாழும் கலைவாணி! (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் மாட்சிமை நிறைந்த தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாத கமலங்களில் பணிந்து வணங்குகிறேன். எனது ஆத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சொக்கநாதபுரம் ஊராட்சியில் உள்ள நடுநிலைப் பள்ளி 1966 ஆம் ஆண்டில் உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது. இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், 2014—ல்தான் மக்களுடைய பங்களிப்புத் தொகையான இரண்டு இலட்சம் ரூபாயும் வழங்கப்பட்டுள்ளது. அரசு விதித்துள்ள அனைத்து நிபந்தனைகளையும் அந்தப் பள்ளி பூர்த்தி செய்துள்ளது. அதேபோல், தாளானபுரம் ஊராட்சியிலுள்ள உயர்நிலைப் பள்ளியையும் சேர்த்து, இரண்டு உயர்நிலைப் பள்ளிகளையும் தரமுயர்த்திக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த வேண்டுமெனில், பொதுமக்கள் பங்களிப்புத் தொகையான ரூ.2 இலட்சம் செலுத்தப்பட்டிருக்க வேண்டும்; பேரூராட்சியாக இருந்தால் ஒரு ஏக்கர் நிலமும், ஊரகப் பகுதியாக இருந்தால் மூன்று ஏக்கர் நிலமும் இருக்க வேண்டும்; 10 ஆம் வகுப்பில் குறைந்தபட்சம் 100 மாணாக்கர்கள் இருத்தல் வேண்டும்; தரமுயர்த்தப்படும் பள்ளிக்கும், வேறு பள்ளிகளுக்கும் இடையே குறைந்தபட்சம் 8 கிலோ மீட்டர் தூரம் இருத்தல் வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொக்கநாதபுரம் ஊராட்சி மற்றும் தாளாளபுரம் ஊராட்சி என இரண்டு ஊராட்சிகளைக் குறிப்பிட்டு, அங்கே இரண்டு இலட்சம் ரூபாய் பொதுமக்களுடைய பங்களிப்பு செலுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவித்து, அந்தப் பள்ளிகளைத் தரமுயர்த்தித் தர இயலுமா என்கின்ற கேள்வியை இங்கே கேட்டிருக்கின்றார்கள். அந்தப் பள்ளிகள் நான் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ள அரசினுடைய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருந்தால், அது குறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, எதிர்வருகின்ற காலங்களில் அப்பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்துவதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. மாதேஸ்வரன் அவர்கள்.*

திரு. கு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி கூறி அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 59, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*